இன்றைய செய்தி நாளைய வரலாறு
# முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 21-12-2024

## அம்பேத்கரை உச்சரிக்க அருகதை உண்டா?

‘அண்ணல் அம்பேத்கரை காங்கிரஸ் கட்சி மதிக்கவில்லை, புறக்கணித்தது’ என்று பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் சொல்கிறார்களே, இவர்களுக்கு அம்பேத்கரை உச்சரிக்க அருகதை உண்டா?

2014 ஆட்சிக்கு வந்தபிறகு அரசியல் லாபங்களுக்காக அம்பேத்கரை உச்சரித்தார்களே தவிர, அதற்கு முன்னதாக அண்ணலுக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்புகள் இருந்தது?

2017 ஆம் ஆண்டு அம்பேத்கரின் பேரன் ஆனந்த் தெல்தும்டேவைக் கைது செய்தது பா.ஜ.க. அரசு அல்லவா?

அண்ணலைக் கொச்சைப்படுத்தி அருண்சோரி புத்தகம் எழுதிய போது இவர்கள் எங்கே போனார்கள்? Worshipping False Gods - Ambedkar, and the facts which have been Erased - என்பது அருண்சோரி எழுதிய நூல். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சிந்தனையாளர் குழுவில் இருந்தவர் இவர். பா.ஜ.க. அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர். “பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவாளராக இருந்த அம்பேத்கர், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடவில்லை” என்று அதில் அருண்சோரி எழுதினார். இந்த நூலுக்கு நாடுமுழுவதும் கடும் எதிர்ப்புகள் வந்த போது, இப்புத்தகத்திற்குத் தடை ஏற்படுத்தும் சூழல் ஏற்பட்டது. அதைத் தடை செய்யக் கூடாது என்று சொன்னவர்கள் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆட்கள்.

**‘இராமனும் கிருஷ்ணனும் ஓர் புதிர்’ என்பது அம்பேத்கர் எழுதிய நூல் ஆகும். அந்த நூலைத் தீக்கிரையாக்கி அதனைத் தடை செய்ய வேண்டும் என்று போராடியது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அமைப்பினர்தான் என்பது மறந்து போய்விட்டதா?**

**மராத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயரை வைப்பதற்கு எதிராக 1994 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலத்தில் போராடியவர்களில் அதிகம் இவர்கள்தானே என்பதை மறக்க முடியுமா? அம்பேத்கரின் சிலைகள் அவமானப்படுத்தப்பட்டனவே? தலித் மக்கள் தாக்கப்பட்டார்களே?**

குஜராத் மாநிலத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக உயர் வகுப்பினர் 1980 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் அம்பேத்கர் சிலைகள்தான் சேதப்படுத்தப்பட்டன.

**ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவராக சுதர்சன் பொறுப்பேற்ற போது, “இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்துக்களுக்கு விரோதமானது. மேற்கத்தியக் கொள்கைகளின் அடிப்படையில் அது உருவாக்கப்பட்டது. ஆகையால் நாம் அதை புறந்தள்ளிவிட்டு, புதிய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத வேண்டும்” என்று சொன்னார். அம்பேத்கரை இழிவுபடுத்தும் செயல் அல்லவா இது?**

சமூக நீதியை உருவாக்க ‘சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பின் தங்கிய’ மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதை முதல் அரசியலமைப்புச் சட்டத் திருத்தமானது 1951ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டது. இதனைச் செயல்படுத்திக் கொடுத்தவர் அன்றைய பிரதமர் நேரு அவர்கள். ஆனால், ‘பொருளாதார அளவுகோல் வேண்டும்’ என்று அப்போது சொன்னவர் இந்து மகாசபை உறுப்பினரான சியாம பிரசாத் முகர்ஜி. இந்தத் திருத்தத்தை பிரதமர் நேருவும், சட்ட அமைச்சர் அம்பேத்கரும் நிராகரித்தார்கள். இதுதொடர்பாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சொன்னவர் சியாம பிரசாத் முகர்ஜி. இவரது திருத்தத்துக்கு ஆதரவாக 5 வாக்குகள் மட்டுமே இந்திய நாடாளுமன்றத்தில் கிடைத்தது.

**பட்டியலினத்தவருக்கு பத்து ஆண்டுகள் மட்டுமே இட ஒதுக்கீடு வழங்க வேண்டும், அப்படிச் செய்தால்தான் அவர்கள் மட்டுமே சலுகைகள் அனுபவிக்கிறார்கள் என்று மற்றவர்களுக்கு இருக்கும் உறுத்தல் பறந்து போகும் என்று சொன்னவர் ஆர்.எஸ்.எஸ். தலைவரான கோல்வால்க்கர்.**

**சமூகநீதிக்கும், இடஒதுக்கீட்டுக்கும் எதிரானவர்களாக இவர்கள் இருந்ததால்தான் மண்டல் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்ட பிரதமர் வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தார்கள்.**

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பை 7.8.1990 அன்று பிரதமர் வி.பி.சிங் வெளியிட்டார். அப்போது டெல்லி ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தில் ஒரு கூட்டம் நடந்தது. அப்போதைய பா.ஜ.க. தலைவர் முரளி மனோகர் ஜோஷி அதில் கலந்து கொண்டார். அன்றைய தேசிய முன்னணி அரசுக்கு வெளியில் இருந்து பா.ஜ.க. ஆதரவு தெரிவித்து வந்தது. அந்த ஆதரவை வாபஸ் வாங்க வேண்டும் என்று அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

‘மண்டல்’-ஐ வைத்து பிரதமர் வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தால் பிற்படுத்தப்பட்டோர் எதிர்ப்பு வந்துவிடும் என்பதால் ராமர் கோவில் கட்ட யாத்திரை கிளம்பினார்கள். இதுதொடர்பான பா.ஜ.க.வின் தேசியக் குழுக் கூட்டத்தில் (1990 செப்டம்பர் 14) வி.எச்.பி.தலைவர் அசோக் சிங்கால் சிறப்பு அழைப்பாளராக வரவழைக்கப்பட்டார்.

மண்டல் தொடர்பான அறிவிப்பு ஆகஸ்ட் மாதம் வந்தது. கோவில் பிரச்சினையை செப்டம்பர் மாதம் கிளப்பினார்கள். “அத்வானியின் ரத யாத்திரையை அனுமதிக்க முடியாது” என்றார் பிரதமர் வி.பி.சிங். அத்வானியின் ரத யாத்திரை பீகாருக்குள் நுழைந்ததும் அதனைத் தடை செய்து அத்வானியைக் கைது செய்தார் அன்றைய பீகார் மாநில முதலமைச்சர் லாலு பிரசாத். (இன்று வரை லாலு பிரசாத், பா.ஜ.க. தலைமையால் தொடர்ந்து தொல்லைக்கு உள்ளாக்கப்படுவது இதனால்தான்) இதற்காகத்தான் காத்திருந்தது பா.ஜ.க. உடனடியாக பிரதமர் வி.பி.சிங் அரசுக்கு நெருக்கடி கொடுத்தது. நவம்பர் 7 ஆம் நாள் பதவி விலகினார் வி.பி.சிங்.

**ஆகஸ்ட் மாதம் அறிவிக்கப்பட்ட சமூகநீதியை, நவம்பர் மாதத்தில் நாசம் செய்தவர்கள்தான் இன்றைக்கு சமூகநீதியைப் பற்றியும், அம்பேத்கரைப் பற்றியும் பேசுகிறார்கள்.**

**இதன் காரணமாக உயர்ஜாதி - உயர் வர்க்க கட்சி என்ற அடையாளம் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டது. அதனைத் துடைக்க மெதுவாக அம்பேத்கரைச் சொல்லத் தொடங்கினார்கள். அம்பேத்கரை நீண்ட காலத்துக்கு எதிர்க்க முடியாது என்ற நிலைமை வந்ததும், அம்பேத்கரை கபளீகரம் செய்ய பா.ஜ.க. முயற்சித்தது. பட்டியலினத்தவரை ஈர்க்கும் தந்திரமாகவும் பயன்படுத்தினார்கள். ‘இந்துத்துவ’ அம்பேத்கராக அவரைக் காட்ட முயற்சித்தார்கள். அவருக்கு காவிச் சாயம் பூச முயற்சித்தார்கள்.**

‘படேலுக்கு எதிரானது காங்கிரஸ், அம்பேத்கருக்கு எதிரானது காங்கிரஸ்’ என்று புனைவு வரலாறுகளின் மூலமாக நிகழ்கால உண்மைகளை மறைத்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. இந்தியாவுக்கு, இந்திய மக்களுக்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது அல்லவா பா.ஜ.க.?




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.12.2024) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 951 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 559 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 133 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 222 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ப. செல்வராஜ், கே.இ.பிரகாஷ், கு.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி. வெங்கடாசலம், திருமதி சி. சரஸ்வதி, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘அம்ரித்பாரத்’ ரயில் நிலையங்கள் திட்டத்தில்

# தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள் யாவை?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விக்கு – ரயில்வே அமைச்சர் பதில்!

**புதுடெல்லி, டிச. 21 –**

**திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ரயில்வே துறை தொடர்பான கேள்விகளை எழுத்துபூர்வமாக மக்களவையில் கேட்டிருந்தார்.**



‘அம்ரித் பாரத் ரயில் நிலையங்கள்’ திட்டத்தின் கீழ் இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள், மாநில வாரியாக என்ன?

தமிழ்நாட்டில், குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில், அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

தூத்துக்குடி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ரயில் நிலையங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் நிலை? என்ற கேள்விகளை கனிமொழி கருணாநிதி கேட்டிருந்தார்.

இவற்றுக்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளார்.

அவரது பதில் வருமாறு:–

“ரயில் நிலையங்களை மேம்படுத்துவதற்காக ரயில்வே அமைச்சகம் ‘அம்ரித் பாரத் நிலையம்’ என்ற திட்டத்தை” அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் நீண்ட கால அணுகுமுறையுடன் தொடர்ச்சியான செயல்பாடுகளின் அடிப்படையில் ரயில்நிலையங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ரயில் நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் மாஸ்டர் பிளான் தயாரித்து, அதை படிநிலைகளாக செயல்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கம். இதன்படி ரயில் நிலையத்தை எளிதில் அணுகுதல், பயணிகள் காத்திருப்பு அரங்குகள், கழிப்பறைகள், லிஃப்ட்கள், எஸ்கலேட்டர்கள், தூய்மையான பிளாட்ஃபார்ம், இலவச வைஃபை, அந்தந்த பகுதிகளின் உள்ளூர் தயாரிப்புகளை விற்பனை செய்ய சிறு கடைகள், பயணிகளுக்கான சிறந்த தகவல் சேவை, விஐபிகளுக்கான லாவுஞ்ச் வசதி, வணிக சந்திப்புகளுக்கான தரமான அரங்குகள் உள்ளிட்டவற்றை ரயில் நிலையங்களில் ஏற்படுத்த வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1337 நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் தூத்துக்குடி மாவட்டத்தின் திருச்செந்தூர், கோவில்பட்டி மற்றும் தூத்துக்குடி உட்பட 77 நிலையங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள திருச்செந்தூர், கோவில்பட்டி மற்றும் தூத்துக்குடி ரயில் நிலையங்கள் உட்பட 71 ரயில் நிலையங்களுக்கான மேம்பாட்டுப் பணிகளுக்கான டெண்டர்கள் விடப்பட்டுள்ளன. திருச்செந்தூர் ரயில் நிலையத் தில், நுழைவு வாயில், விதானம், நடைமேடை கூரைகளை மேம்படுத்துதல், நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், லிஃப்ட் கட்டுமானம் மற்றும் ஒருங்கிணைந்த பயணிகள் தகவல் அமைப்பை யவழங்குதல் ஆகிய பணிகள் நிறைவடைந்துள்ளன.

புதிய காத்திருப்பு மண்டபம், தங்குமிடம், இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் நடந்துகொண்டுள்ளன. கோவில்பட்டி ரயில் நிலையத்தில், நுழைவு வாயில், நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் ஒருங்கிணைந்த பயணிகள் தகவல் அமைப்பை வழங்குதல் ஆகிய பணிகள் நிறைவடைந்துள்ளன. புதிய முனைய கட்டிட கட்டுமானப் பணிகள், சாலைப் பணிகள் மேம்பாடு, இரு சக்கர வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகள் நடந்துகொண்டுள்ளன.

தூத்துக்குடி ரயில் நிலையத்தில், கழிப்பறைப் பிரிவு,, சுவிட்ச் அறை, வாகன நிறுத்துமிடத்தை மேம்படுத்துதல் போன்ற பணிகள் நடந்துகொண்டுள்ளன. இதேபோல மற்ற அம்ரித் ரயில் நிலையத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மற்ற ரயில் நிலையங்களிலும் திட்டங்கள்நல்ல வேகத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

உதாரணமாக, மதுரை நிலையத்தில், கிழக்குப் பக்க பலநிலை இருசக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் துணை மின்நிலையத்தின் கட்டமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன, கிழக்குப் பக்க முனைய கட்டிடப் பணிகள், இரு பக்கங்களிலும் மல்டி லெவல் கார் பார்க்கிங், இரு முனையக் கட்டிடங்களையும் இணைக்கும் ஏர் காண் கோர்ஸ், சுரங்கப் பாதை ஆகியவை கட்டுமானப் பணியில் உள்ளன.

சென்னை எழும்பூர் நிலையத்தில், பார்சல் கட்டிடத்தின் கட்டமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன, மேலும் இருபுறமும் மல்டி லெவல் கார் பார்க்கிங், காந்திஇர்வின் சாலை பக்கமுள்ள முனையக் கட்டிடம் ஆகிய பணிகள் நடந்துகொண்டுள்ளன. சமல்பட்டி நிலையத்தில், புதிய பிரதான முனையக் கட்டிடம் மற்றும் பிரதான நுழைவு பக்க சுற்றுப் பகுதி கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மேலும் இரண்டாவது நுழைவுப் பகுதி பார்க்கிங், பிளாட்பார்ம் உயர்த்துதல், சுற்று வட்டச் சுவர் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காரைக்குடி நிலையத்தில், நடைமேடை கூரை, இருக்கை ஏற்பாடு, வாகன நிறுத்துமிடம், புதிய தாழ்வாரம், லிஃப்ட் கட்டுமானம் மற்றும் ரயில் பெட்டி அறிகுறி பலகைகள் நிறுவுதல் போன்ற பணிகள் நிறைவடைந்துள்ளன. காத்திருப்பு மண்டபம், நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களுக்கான கட்டமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன. அரியலூர் மற்றும் மன்னார்குடி நிலையங்களில், புதிய நுழைவு வாயில்கள், நுழைவு மண்டபம், அணுகு சாலை, வாகன நிறுத்துமிடம், கூட்டப் பகுதி, முன்பதிவு கவுண்டர்கள், நடைமேடை மேற்பரப்பு, காத்திருப்பு மண்டபங்கள் மற்றும் நடைமேடை கூரை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், ரயில் நிலையங்களின் மேம்படுத்தல் என்பது பயணிகள் மற்றும் ரயில்களின் பாதுகாப்பை உள்ளடக்கியது. தீயணைப்புத் துறை, மரம் வெட்டுதலுக்கு அனுமதி உள்ளிட்ட சட்ட ரீதியான பல அனுமதிகள் இப்பணிகளுக்குத் தேவைப்படுகின்றன.

மேலும் குடிநீர், கழிவுநீர் இணைப்புகள், ஆப்டிகல் ஃபைபர் கேபிள்கள், எரிவாயு குழாய் இணைப்புகள், மின்சாரம், சிக்னல் கேபிள்கள் போன்றவற்றை மாற்றும்போது சவால்கள் இருக்கின்றன. பயணிகளுக்கு இடையூறு இன்றி, ரயில்கள் இயக்குவதற்கு இடையூறு இன்றி, தண்டவாளங்கள் மற்றும் உயர் மின்னமுத்த மின் இணைப்புகளுக்கு அருகாமையில் மேற்கொள்ளப்படும் பணிகள் என்பதால் திட்டமிட்ட நேரத்துக்குள் பணிகளை முடிக்க இயலவில்லை., எனவே இப்பணிகளை முடித்திட எந்த காலக்கெடுவையும் குறிப்பிட இயலவில்லை.

இந்திய ரயில்வேயில் நிலையங்களை தரமுயர்த்துதல், மேம்படுத்துதல் என்பது தொடர்சியான செயல்முறையாகும், இது தொடர்பான பணிகள் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன, அவை முன்னுரிமை மற்றும் நிதி கிடைக்கும் தன்மைக்கு உட்பட்டவை. இருப்பினும், நிலையங்களை தரமுயர்த்துதல், மறுமேம்பாட்டிற்கான முன்னுரிமை, குறைந்த வகை நிலையங்களை விட உயர் வகை நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது.

அம்ரித் ரயில் நிலையத் திட்டத்தின் கீழ், ரயில் நிலையங்கள் மேம்படுத்துதல், பயணிகளுக்கான வசதிகளை மேம்படுதுத்தல் ஆகியவை பிளான் ஹெட் 53 ‘வாடிக்கையாளர் வசதிகள்’ இன் கீழ் நிதியொதுக்கி செயல்படுத்தப்படுகின்றன. பிளான் ஹெட் 53 இன் கீழ் ஒதுக்கீட்டின் விவரங்கள் மண்டல ரயில்வே வாரியாக பராமரிக்கப்படுகின்றன, வேலை வாரியாகவோ அல்லது நிலைய வாரியாகவோ அல்லது மாநில வாரியாகவோ அல்ல. தமிழ்நாடு மாநிலத்தில் தெற்கு ரயில்வே மற்றும் தென்மேற்கு ரயில்வே என இரண்டு மண்டலங்களால் ரயில்வே நிர்வகிக்கப்படுகிறது.

கடந்த மூன்று நிதியாண்டுகளிலும், நடப்பு நிதியாண்டிலும், இந்த மண்டலங்களுக்கு ரூ.4,313 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மண்டலங்களுக்கு கடந்த மூன்று நிதியாண்டுகளிலும், நடப்பு நிதியாண்டில் அக்டோபர், 2024 வரை ரூ.2,506 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது என்று ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

